# THE FACTORS INFLUENCE ON G.C.E A/L STREAM SELECTION: A SOCIOLOGICAL RESEARCH BASED ON MULLAITHIVU DISTRICT

**T. Rusika**[212]

Correspondence: rusikathabananthan@gmail.com

ABSTRACT

Advanced Level Education is more important for the personal, social and economic development of the individual as well as the nation. Education achievements are seen as precious advancements in Tamil community who are living in North and East part of Sri Lanka. Parents and teachers have been trying for better educational achievement of Tamil students for a very long time. The objective of this study is to identify the social, family and the school factors influence on G.C.E A/L stream selection among students in Mullaithivu District. A mixed method (quantitative and qualitative) was employed to collect the relevant data for this study. Primary data were questionnaires, case study and semi structured interviews with parents, teachers and students. This study utilized the secondary data too such as available literature reviews and Province Education web site. Total samples comprised with 749, 120 students from 25 schools in Mullaithivu Districtv (2016). Simple Random sampling method was used to identify the factors influence on A/L stream selection. Basic statistical procedures and qualitative techniques were used to analyze the data. Results indicate that the family factors with 80 % of the total sampling (low income, high tuition fee for science and Maths, Lack family support, and living condition). Hence the site of social, distance between home and school, non - availability of private classes and limited transport facilities are much influencing factor to choose the subject. Low income of the family and the living condition of the students are the most important factor influence on subject selection. The government must take necessary steps to improve the standard of education of the students who are living in Mullaithivu District. As a recommendation of this research, Government must improve the facilities of this district.

**Keywords:** advanced level, education, family factors, selection of streams, resources

**ஆய்வுச் சுருக்கம்**

உலகமயமாக்கல் சூழ்நிலையில் மனிதன் எதிர்கொள்ளும் சவால்களை குறைப்பதற்கு கல்வி என்பது முக்கியமான ஒரு கருவியாக காணப்படுகிறது. கல்வி என்பது மாணவர்களிடத்தில் திறன்கள், நுண்ணறிவு மற்றும் நற்பண்புகளையும் வளர்க்கின்றது. உயர்தரக்கல்வி என்பது தனியாளின் சமூகப், பொருளாதார அபிவிருத்திக்கும், நாட்டின் அபிவிருத்திக்கும் அவசியமானதாகும். தமிழ் சமுதாயங்கள் குறிப்பாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு கல்விசார் அடைவுகள் என்பது விலைமதிக்க முடியாத நன்மையாக பார்க்கப்படுகிறது. இங்கு பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவர்களின் சிறந்த கல்வி அடைவு மட்டங்களுக்காக நீண்டகாலமாக முயற்சி செய்து வருகின்றனர். இங்கு மாணவர்களின் முக்கியமான நோக்கமாக இருப்பது கல்விப்பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சையில் உயர்சித்திகளைப் பெற்று அரச பல்கலைக்கழகங்களுக்கு செல்வதாகும். ஆனாலும் க.பொ.த சாதாரணதரப்பரீட்சையினை முடித்து உயர்தரத்தில் பாடங்களை தெரிவு செய்வதில் பல்வேறுபட்ட காரணங்களினால் மாணவர்கள் சவால்களுக்கு உள்ளாகி

[212] Department of Sociology, University of Jaffna, Sri Lanka.

வருகின்றனர். இவ்வாய்வின் நோக்கமானது முல்லைத்தீவு மாவட்டத்தில் க.பொ.த உயர்தரத்தில் துறைத்தெரிவினை மேற்கொள்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காண்பதாகும்.

இவ்வாய்வு ஒரு கலப்புமுறை ஆய்வாகும். இங்கு முதன்நிலைத் தரவுசேகரிப்புக் கருவியாக நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினாக்கொத்து, விடய ஆய்வுகள் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடனான அரைக்கட்டமைக்கப்பட்ட நேர்காணல் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுசேகரிப்பு கருவியாக இலக்கியமீளாய்வுகள் மற்றும் மாகாண கல்வித்திணைக்கள இணையத்தளத் தரவுகள் பயன்படுத்தப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 25 பாடசாலைகளிலும் உள்ள மொத்த மாணவர்கள் 749, இவர்களில் எளிய எழுமாற்று அடிப்படையில் 120 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்(2016). புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு நுட்பங்களும், பண்புசார் நுட்பங்களும் தரவுகளைப் பகுப்பாய்வு செய்ய பயன்படுத்தப்பட்டன.

ஆய்வின் முடிவுகளாக பெரும்பாலான மாணவர்கள் பாடசாலையில் கணித மற்றும் விஞ்ஞான துறைகள் இல்லாமையின் காரணமாக கலை மற்றும் வர்த்தக துறைகளினை தெரிவு செய்துள்ளனர். பாடசாலை சார்ந்த காரணிகளாக ஆய்வுகூட வசதிகளின்மை, ஆசியர் பற்றாக்குறை, வகுப்பறைச் சூழல், நூலக வசதி குறைபாடுகள் போன்றன துறைத்தெரிவில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. குடும்பக் காரணிகளை நோக்குகின்ற போது 80வீதமான மாணவர்களில் அவர்களின் குடும்பத்தின் குறைந்த வருமானம், தனியார் கல்விக் கட்டணம் அதிகம், குடும்ப ஆதரவு குறைபாடுகள் போன்ற பல்வேறு காரணங்கள் துறைத்தெரிவில் செல்வாக்குச் செலுத்துகின்றன. சமூகக் காரணங்களினை நோக்கும் போது வீட்டிற்கும் பாடசாலைக்கும் இடையிலான தூரம், தனியார் வகுப்புக்களின் கிடைப்பனவு இன்மை, வரையறுக்கப்பட்ட போக்குவரத்து வசதிகள் போன்றன செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

இந்த உலகத்தில் பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் வாழுகின்ற மாணவர்கள் கல்வி அடைவுமட்டத்தின் மூலமாக தமது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திக் கொள்வதில் பல்வேறு சவால்களுடன் வாழ்ந்து வருகின்றனர். ஆகவே முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழுகின்ற மாணவர்களின் கல்வித்தரத்தினை அதிகரிப்பதற்கு தேவையான செயற்பாடுகளினை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாய்வின் பரிந்துரைகளாக

- அரசு இம்மாவட்ட பாடசாலைகளுக்கு தேவையான ஆசிரியர்களை வழங்குதல், ஆய்வுகூட மற்றும் நூலக வசதிகளை ஏற்படுத்தல், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலமாக பாடசாலையின் வசதிகளை மேம்படுத்த வேண்டும்.
- புதிய பாடத்துறைகளினை அமுலாக்கம் செய்தல். உதாரணமாக கணிதம், விஞ்ஞானம் மற்றும் தகவல் தொடல்பாடல் தொழில்நுட்பம்
- பாடத்தெரிவு தொடர்பாக மாணவர்களிற்கு விழிப்புணர்வு செயற்பாடுகளினையும் வழிகாட்டல் நிகழ்வுகளினையும் நடத்துதல் வேண்டும்.

**திறவுச் சொற்கள்**: உயர்தரம், கல்வி, குடும்பக்காரணிகள், துறைத்தெரிவு, வளங்கள்

## ஆய்வு அறிமுகம் (INTRODUCTION)

கல்வி என்பது ஒருவனது தனிப்பட்ட தேவைக்காக மட்டுமல்லாமல் சமூகத் தேவைகளையும் கருத்தில் கொண்டு வழங்கப்பட வேண்டியதாகும். அறிவு சார்ந்த செயற்பாடுகளை மட்டுமல்லாமல் தத்தமது கலாசாரப் பண்பாடுகளையும் பல்வேறுபட்ட திறன்களையும் அளிக்கும் ஒரு செயலே கல்வி எனப்படுகிறது. இலங்கையில் ஒரு மாணவரது பாடசாலைக் கல்வி நிலையானது 13 வருடங்களாகும். அதாவது பாடசாலைக் கல்வியாண்டில் மாணவர்கள் 3 பரீட்சைக்கு தம்மை தயார்படுத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது. தரம் 05ல் புலமைப்பரிசில் பரீட்சை, தரம் 11ல் கல்விப் பொதுத்தாரதர சாதாரணப் பரீட்சை மற்றும் தரம் 13ல் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையாகும். கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை என்பது ஒரு மாணவரது எதிர்கால வாழ்க்கையை தீர்மானிக்கும் ஒன்றாகக் காணப்படுகின்றது.ள ஒரு மாணவன் க.பொ.த சாதாரணப் பரீட்சையில் சித்தி எய்திவிட்டு கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பிற்கு செல்லும் போது பாடத்தெரிவினை மேற்கொள்வதில் பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துவதுடன் மற்றும் பல சவால்களையும் எதிர்நோக்குகின்றான்.

இன்று உலகில் கிராமப் பாடசாலைகள் நகர பாடசாலைகளைப் போல விருத்தியடையவில்லை. இதற்கு காரணம் அரசியல், பொருளாதார மற்றும் சமூகக் காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றது. கிராமப் பாடசாலைகளில் மாணவர்கள் கல்வியை உரிய முறையில் பெற்றுக் கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். இலங்கையினை எடுத்து நோக்குமிடத்து இற்றைக்கு ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் மாணவ மாணவிகளிடம் காணப்பட்ட தொழில்நுட்ப அறிவானது ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே இருந்தது. இதற்கு கடந்த மூன்று தசாப்தகாலமாக நீடித்து வந்த உள்நாட்டு சிவில் யுத்தம் ஓர் முக்கிய காரணமாக உள்ளது. நகரப் பாடசாலைகளில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் கணித, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரிவினையே தெரிவுசெய்து கற்று அதனூடாகத் தமது கல்விக்கேற்ப உரிய வேலை வாய்ப்பினை விரைவாகவும் பெறுகின்றனர். இருப்பினும் கிராமப்புற பாடசாலைகளில் கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் குறை எண்ணிக்கையான மாணவர்களே கணித,விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பிரிவினை தெரிவு செய்கின்றனர். இலங்கையில் ஊவா ,மலையகம், யாழ்ப்பாணத்தில் தீவகப் பகுதி, கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு போன்ற இடங்களில் கல்விப் பொதுத்தராதர உயர்தர பிரிவில் கணித, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளில் குறைந்தளவான மாணவர்களே கற்கின்றனர். வடமாகாணத்தை பொறுத்த வரையில் 2015 -2016 ஆண்டு காலப்பகுதியில் கல்விப் பெறுபேறுகளில் இலங்கையில் உள்ள மாகாணங்களில் ஒன்பதாவது இடத்தை வடமாகாணம் பெற்றுள்ளது. ஆனால் இதற்கு முன்னரான ஆண்டுகளில் வடமாகாணமே முதலிடத்தை பெற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் 30 ஆண்டு காலப் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் சமூக, பொருளாதார, கல்வி துறைகளில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டமானது உள்நாட்டு போரில் மிகவும் பாதிப்புக்கு உள்ள இடமாகவே காணப்படுகிறது. அத்துடன் இலங்கையில் உள்ள மாவட்டங்களில் வறுமைக் கோட்டின் கீழ் அதிக எண்ணிக்கையான மக்கள் வாழும் பிரதேசமாகும். அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய், முல்லைத்தீவு என இருவலயம் காணப்படுகிறது. கல்விப் பொதுத்தராதர உயர்தர பிரிவினைக் கொண்டு 25 பாடசாலைகள் மட்டுமே காணப்படுகிறது. அதிலும் 1(AB) பாடசாலைகள் 12, 1C பாடசாலைகள் 13 காணப்படுகிறது (மூலம்: http://www.edudept.np.gov.lk )

கென்யாவில் மாணவர்கள் தங்கள் உயர்கல்வியை தொடருவதில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணியாக வறுமை மற்றும் குறைந்த சமூக, பொருளாதார நிலை செல்வாக்குச் செலுத்துகின்றது. அத்துடன் பெற்றோர்களின் இழப்பு, விவாகரத்து போன்ற காரணிகளும் பாடத்தெரிவை செய்வதில் செல்வாக்கு செலுத்துகின்றது. சமூகக் காரணிகளாக சமூகத்திற்குள் வகிக்கும் சாதி, வர்க்கம் மற்றும் இனம் போன்றன முக்கியமாக செல்வாக்கு செலுத்துகின்றது(Jackson Muchunku,2015). ). கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் துறைத்தெரிவில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக, சமூகக் காரணிகள், பாடசாலை சார்ந்த காரணிகள், ஆசிரியர்கள் சார்ந்த காரணிகள், குடும்பம் சார்ந்த காரணிகள் மற்றும் பௌதீக வளம் சார்ந்த காரணிகள் காணப்படுகிறது. அந்த வகையில் ஆய்வுப் பிரதேசமான கல்விப் பொதுத்தராதர உயர்தர துறைத்தெரிவில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை அறிந்து கொள்வதற்காக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## இலக்கியமீளாய்வு (Literature Survey)

James,Richard et.al (1999) அவுஸ்ரேலியாவில் உள்ள கிராமப்புற மற்றும் நகர்புறத்தில் உள்ள இரண்டாம் நிலை பாடசாலைகளில் உயர்தரத்தில் கற்கும் மாணவர்களின் பாடத்தெரிவில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளில் பின்வரும் காரணங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றது.கிராமப்புற மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வாழ்பவர்களுக்கு உயர்தர வகுப்பில் கல்வி நடவடிக்கையின் பங்களிப்பு ஆனது இவர்களுடைய சமூக, பொருளதார மற்றும் கலாச்சார சூழ்நிலைகளால் பாதிக்கப்படுகிறது.கிராமப்புற மாணவர்களை விட நகர்புற மாணவர்கள் அதிகமான கல்வியறிவினை பெறுகின்றனர். உயர்தர பிரிவில் கல்வி கற்கும் செலவானது கிராமப்புற மாணவர்களுக்கு மிகவும் பாரிய பிரச்சினையாக உள்ளது.

Richard Ingersoll and David Perda (2009) ஆய்வில் சமகால கல்வியில் குறிப்பாக கணித மற்றும் விஞ்ஞான புலங்களில் போதுமான, தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் பாடசாலையில் போதாத நிலையில் இருப்பது கவலை தரும் விடயமாக காணப்படுகிறது. ஆசிரியர் பற்றாக்குறைக்கு முதன்மையான காரணியாக காணப்படுவது ஆசிரியர்கள் மத்தியில் காணப்படும் அதிக பணி ஓய்வு மற்றும் மாணவர்களின் சேர்க்கை முறைகளில் காணப்படும் குறைபாடுகளும் ஆகும். இந்த ஆய்வின் நோக்கம் என்னவெனில் கணித மற்றும் விஞ்ஞான பாடங்களில் ஆசிரியர் பற்றாக்குறைக்கான பிரச்சினையை மதிப்பீடு செய்வதாகும். ஆய்வில் 3 மூலகங்களை பயன்படுத்தி தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது. மேலும் தரவுகளில் கூறப்பட்ட விடயம் என்னவெனில் கணித மற்றும் விஞ்ஞான புலங்களில் குறிப்பாக தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் வகுப்பறையில் இல்லாத நிலை பல பாடசாலைகளில் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் கணித மற்றும் விஞ்ஞான ஆசிரியர்கள் குறைவாக காணப்பட்டு வருகிறது அங்கு இதற்கு காரணம் மரபு வழி கல்வியும் மற்றும் விவேகம் குறைந்தவர்களும் இருப்பதனாலேயே ஆகும்.

இவ்வாய்வுகளுடன் ஆய்வுப் பிரதேசத்தினை ஒப்பிட்டு நோக்குமிடத்து ஆசிரியர் பற்றாக்குறை, சமூகப் பொருளாதாரக் காரணிகள் துறைத்தெரிவில் செல்வாக்குச் செலுத்துவதால் தாம் விரும்பிய துறையினை தெரிவு செய்யாத நிலமை காணப்படுகின்றது.

## ஆய்வு முறையியல் (RESEARCH METHODOLOGY)

### ஆய்வு வடிவம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் துறைத்தெரிவில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் என்ற ஆய்வில் அளவு மற்றும் பண்புசார் இணைந்த முறை (Mixed Method) பயன்படுத்தப்பட்டுள்ளது. இது முல்லைத்தீவு மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வாகும்

### தரவுசேகரிப்பு முறைகளும், மாதிரித் தெரிவும்

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தரப் துறைத்தெரிவில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் என்ற இவ்வாய்விற்கு முதலாம்நிலைத் தரவுகளாக விடயஆய்வு, நேர்காணல், மற்றும் நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினாக்கொத்து என்பனவும் இரண்டாம்நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் இவ்வாய்விற்கு நோக்கத்திற்குரிய மாதிரி எடுப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் ஆய்வுப்பிரதேசத்தில் 2016 ஆண்டு காலப் பகுதியில் 749 மாணவர்கள் கல்விப் பொதுத்தாரதர உயர்தரப் பிரிவில் கல்வி

கற்றுள்ளனர். இவர்களுள் 120(n=120) பேரை நோக்கத்திற்குரிய மாதிரி எடுப்புமுறையை பயன்படுத்தி ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளனர்.
ஆய்விற்குப் பெற்றுக்கொண்ட தரவுகளானவை மாணவர்களின் பூரணசம்மதத்துடன், எழுத்துமூலம் ஒப்புதல் பெறப்பட்டு தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஆய்வானது நேர்மையுடனும் உண்மையாகவும் மேற்கொள்ளப்பட்டதோடு ஆய்வுச் செயன்முறையின் அனைத்துக் கட்டங்களிலும் ஆய்வு ஒழுக்கவியல் பின்பற்றப்பட்டுள்ளது.

**தரவுப் பகுப்பாய்வு**

அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் இணைத்து விபரண மற்றும் கருப்பொருள் அடிப்படையிலான வகையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை செய்யப்பட்டுள்ளன.

**பெறுபேறுகள் மற்றும் கலந்தரையாடல்**

**பெறுபேறுகள்**

துறைத்தெரிவு தொடர்பானது

அட்டவணை 1.1

| இல | பாடம் | மாணவர் எண்ணிக்கை (முல்லைத்தீவு) | மாணவர் எண்ணிக்கை துணுக்காய் |
|---|---|---|---|
| 1 | உயிரியல் | 75 | 14 |
| 2 | கணிதம் | 72 | 11 |
| 3 | தொழில்நுட்பம் | 74 | 44 |
| 4 | வணிகம் | 121 | 18 |
| 5 | கலை | 237 | 83 |
| | **மொத்தம்** | **579** | **170** |

(மூலம்: http://www.edudept.np.gov.lk )

மேற்குறித்த அட்டவணைவனையை நோக்குமிடத்து அதிகமான மாணவர்கள் கலை மற்றும் வர்த்தகப் பிரிவினை தெரிவு செய்துள்ளனர். எனினும் கணித, உயிரியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவினை குறைந்தளவான மாணவர்களே கற்கின்றனர். அத்துடன் துணுக்காய் கல்வி வலயத்தில் உயர்தரப் பிரிவில் குறைந்தளவான மாணவர்களே கற்கின்றனர் என்பதனை அட்டவணை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. ***"எதிர்கால வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்டும், கல்வி கற்கின்ற சூழலை அடிப்படையாக் கொண்டு, வீட்டின் பொருளாதார நிலையையும் கருத்தில் கொண்டு மாணவர்கள் பாடத்தெரிவினை மேற்கொள்கின்றனர்" (நேர்காணல் 01).*** முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்த வரையில் அதிகளவான மாணவர்கள் கலைப் பிரிவிலேயே ஒவ்வொரு ஆண்டும் கற்கும் நிலை காணப்படுகிறது. குறிப்பாக 2014ஆம் ஆண்டு 390, 2015ஆம் ஆண்டு 409, 2016ஆம் ஆண்டு 320, 2017ஆம் ஆண்டு 328 பேரும் கல்வி கற்கின்றனர் (மூலம்: http://www.edudept.np.gov.lk ).

**பாடசாலை வளங்களும் துறைத்தெரிவும்**
**அட்டவணை 1.2**

| இல | ஆசிரிய வளம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| 01 | ஆம் | 98 | 82% |
| 02 | இல்லை | 22 | 18% |
| | **மொத்தம்** | 120 | **100%** |

(மூலம் - களஆய்வு, வினாக்கொத்து – 2017)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் துறைத் தெரிவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் ஆசிரியர் வளமும் முக்கிய செல்வாக்கு செலுத்துகின்றது. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தினைப் பொறுத்த உயர்தரப் பிரிவுகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. காரணம் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களின்மை, தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களின்மையாகும். இதனால் ஒரு ஆசிரியர் இரண்டு பாடங்களை கற்பிக்கும் நிலை காணப்படுகிறது. குறிப்பாக மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்தே அதிகளவான ஆசிரியர்கள் செல்கின்றார்கள் எனவும் தெரிவித்தனர். **"எங்கட பள்ளிக்கூடத்தில உரிய பாடங்களுக்கு ஆசிரியர்களில்லை. அதால பௌதீகவியல் படிப்பிக்கிற ஆசிரியர் இரசாயனவியல் பாடத்தையும் படிப்பிக்கிறார்**" (விடய ஆய்வு 06).

ஆசிரியர் பற்றாக்குறையினால் மாணவர்கள் கற்றல் சார்ந்து பல்வேறு சவால்களையும் சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர். அதாவது பாடங்கள் விளங்காமைஇபரீட்சைகளில் குறைந்த புள்ளியை பெறுதல்,பாடங்களை உரிய முறையில் கற்க முடியாமை,பாடங்களில் பூரண அறிவை பெறமுடியாமை,அடைவுமட்டம் குறைவடைதல்,பாடங்கள் உரிய முறையில் நடைபெறுவதில்லை.அதிக தூரம் சென்று கற்றல்இபாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்க முடியாமை மற்றும் ஒரு ஆசிரியர் இரு பாடங்களை கற்பிப்பதால் உளப்பிரச்சினை போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

மேலும் 28% தாங்கள் கல்வி கற்பதற்கான வகுப்பறை சூழல் சிறப்பாக இன்மை என்று தெரிவித்தனர். இதற்கு காரணம் வகுப்பறை உடைந்து காணப்படல், வகுப்பறை அதிகம் வெப்பமாக உள்ளது, நிரந்தர கரும்பலகையின்மை, தளபாட வசதியின்மை, மாணவர்களிற்கு தொகைக்கு ஏற்ப வகுப்பறை போதாமை, மரத்துக்கு கீழ் இருந்து கற்றல், பிரதான மண்டபத்தின் பல வகுப்புக்களுக்கு மத்தியில் நடைபெறல் போன்றன காணப்படுகிறது. ***"நான் கலைப் பிரிவில கல்வி கற்கிறன். நாங்க படிக்கிறதுக்கு வகுப்பு இல்லை அதால நாங்க மரத்துக் கீழ தான் இருந்து படிக்கிறது. மழை காலத்தில எல்லாம் கஸ்டம் அதோட தளபாடங்களும் இல்லை மிகவும் சிரமப்பட்டு தான் படிக்கிறோம்"*** (மூலம்: விடய ஆய்வு 07). அத்துடன் கணித, உயிரியல் மற்றும் தொழில்நுட்ப பாடநெறிகளில் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு ஏற்ப ஆய்வுகூட வசதியின்மை காணப்படுகிறது. அதாவது பரிசோதனை மேற்கொள்வதற்கு ஏற்ப உபகரணங்கள் இன்மை, பரிசோதனை செய்யும் கருவிகள் இருந்தும் செய்முறைகள் மேற்கொள்ளப்படுவதில்லை, ஆய்வு கூட வசதியில்லாததால் வகுப்பறையில் தான் சில பரிசோதனைகள் மேற்கொள்ளல், உபகரணங்களை மட்டும் பார்போம் பரிசோதனைகள் மேற்கொள்வதில்லை என குறிப்பிட்டனர். ***"நான் யோகபுரம் மகா வித்தியாலத்தில கற்றனான். நாங்க பரிசோதனைகளை மேற்கொள்வது என்பதே***

***குறைவு தனிய உபகரணங்களை மட்டும் தான் பாப்போம். எக்ஸாமில கேள்வி வரேக்க விடை எழுவது எல்லாம் ரொம்ப கஸ்டமாக இருக்கும். இதால கன பிள்ளைகள் தாங்கள் எக்ஸாமில பெயில் விட்டுவோம் எண்ட பயத்தால இந்த பாடங்களை தெரிவு செய்யுறது இல்ல"*** (மூலம் விடய ஆய்வு 08).

**சமூகம் சார் வளங்களின் கிடைப்பனவும் துறைத்தெரிவும்**
**அட்டவணை 1.3**

| இல | போக்குவரத்துப் பிரச்சினை | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| 01 | ஆம் | 71 | 59% |
| 02 | இல்லை | 49 | 41% |
| | **மொத்தம்** | 120 | **100%** |

(மூலம் - களஆய்வு, வினாக்கொத்து – 2017)

அட்டவணை 1.3 சமூகம்சார் வளங்களின் கிடைப்பனவு சிறப்பாக இருக்குமிடத்து இலகுவாக தேவைகளை நிறைவு செய்யக் கூடியதாக இருக்கும். எனினும் கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்களின் பாடத்தெரிவில் போக்குவரத்து மற்றும் வீட்டிற்கும் பாடசாலைக்குமான தூரம் என்பன முக்கியமாக செல்வாக்கு செலுத்துகின்றது. அதிகமான மாணவர்கள் போக்குவரத்து தொடர்பில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். சில மாணவர்கள் விடுதியில் தங்கியிருத்தல், பாடசாலை அருகாமை, பஸ் வசதி காணப்படுவதால் எந்த பிரச்சினைகளையும் எதிர்கொள்வதில்லை. ஆனால் பெரும்பாலான மாணவர்கள் வசிக்கும் இடத்திற்கும் பாடசாலைக்கும் அதிக தூரம் இருப்பதால் பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றனர். இதனை விட உயிரியல், கணித மற்றும் தொழில்நுட்ப பிரிவுகள் குறிப்பிட்ட சில பாடசாலைகளிலே இருப்பதால் இன்னும் அதிக தூரம் சென்று கற்க வேணும் என்ற காரணத்தினால் தாம் கற்ற பாடசாலைகளில் உயர்தர பிரிவுகளில் கலை அல்லது வர்த்தக பிரிவினை தெரிவு செய்து கற்கின்றனர்.

இன்று கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை பொறுத்த வரையில் இன்று மாணவர்களிடத்தில் கடுமையான போட்டியின் மத்தியில் கற்றலை மேற்கொண்டு உயர்ந்த பெறுபேற்றை பெற ஒவ்வொரு மாணவர்களும் கடுமையாக முயற்சி செய்து படிக்கின்றனர். அந்த வகையில் குடும்பத்தில் உள்ள கஸ்டங்களுக்கும் மத்தியில் தனியார் கல்வி நிலையம் சென்று கல்வி கற்கும் நிலை காணப்படுகிறது. 35% மாணவர்கள் உயர்தர பிரிவு கற்கும் போது தனியார் கல்வி நிலையம் செல்லவில்லை. காரணம் தனியார் கல்வி நிலையம் சென்று கற்க பணவசதியின்மை, தமது பிரதேசங்களில் தனியார் கல்வி நிலைய வசதி இல்லாததால் வேறு பிரதேசங்களுக்கு செல்ல வேண்டும் என்ற காரணங்களால் பாடசாலைக் கல்வி மற்றும் வீட்டிலிருந்து கற்கும் நிலை காணப்படுகிறது.

**குடும்பம் சார் காரணிகளும் துறைத்தெரிவும்**
**அட்டவணை 1.3**

| **இல** | **பொருளாதார வசதி** | **எண்ணிக்கை** | **வீதம்** |
|---|---|---|---|
| **01** | ஆம் | 24 | 20% |
| **02** | இல்லை | 96 | 80% |
| | **மொத்தம்** | **120** | **100%** |

(மூலம் - களஆய்வு, வினாக்கொத்து – 2017)

அதிகமான மாணவர்கள் பொருளாதார வசதியின்மையால் பாதிக்கப்படுகிறார்கள். காரணம் வறுமை, வருமானமின்மை, பெற்றோர் இன்மை, தந்தை அல்லது தாய் சுகவீனம் போன்றவற்றை குறிப்பிட்டனர். வறுமை தான் மிகவும் முக்கிய ஒரு காரணமாக காணப்படுகிறது கற்றல் நடவடிக்கைக்கு இதனால் மாணவர்கள் கற்றல் நடவடிக்கையை இடையில் கைவிடுவதும் மற்றும் உயிரியல், கணித பிரிவினை தெரிவு செய்யாத நிலையும் உள்ளது ***“2016 ஆம் கலைப்பிரிவில கல்வி கற்றனான். எங்கட வீட்டில அப்பா, அம்மா, நான் ,அண்ணா, அக்கா, தம்பி இருக்கினம். அப்பாக்கு சண்டையில ஒரு கால இழந்திட்டார். அதால அப்பா வேலைக்கு போறல. அம்மா வீட்ட தான் இருக்கிறா. அண்ணா கடையில நிக்கிறார், அக்கா தையல் வேலை செய்யிறவா வீட்ட இரண்டு பேட்ட உழைப்பிலையும் தான் குடும்பத்தை அம்மா கொண்டு போறா. எனக்கு ஓ. எல்ல 6ஏ, 2பி, 2சி வந்தது. எனக்கு உயிரியல் பாடம் படிக்க தான் விருப்பம் ஆனா வீட்டுச்சூழ்நிலை, கனதூரம் போய் சென்று வேற பள்ளிக்கூடத்தில படிக்க வேணும் என்டதால நான் படிக்கவில்லை”***(மூலம் விடய ஆய்வு 10) வறுமை என்பது மிகவும் முக்கிய ஒரு பிரச்சினையாக முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்த வரையில் காணப்படுகிறது. காரணம் விவசாயம் மற்றும் கூலி வேலைகளில் தான் பெரும்பாண்மையான குடும்பங்களில் பிரதான தொழிலாக காணப்படுவதால். வருமானம் போதியளவு கிடைக்காது. அந்த வருமானம் அவர்களுடைய அன்றாட தேவைகளுக்கே பயன்படுத்தக் கூடிய வகையில் அமைந்து காணப்படுவதால் கற்றல் நடவடிக்கைக்கு போதிய பொருளாதார வசதி இல்லா தன்மை காணப்படுகிறது.

**கலந்துரையாடல்**

உயர்தர மாணவர்களின் துறைத் தெரிவில் செல்வாக்கு முக்கிய காரணிகளாக குடும்ப, சமூக மற்றும் பாடசாலை செல்வாக்கு செலுத்துகின்றது. குடும்பச் சூழல் காரணமாகவும் வறுமை காரணமாகவும் பாடநெறிகளை கற்கும் மனவிருப்புக்கள் அற்றவராக காணப்படுகின்றனர். இதன் காரணமாக சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றுக் கொள்ள முடியாததாகவும் மேற்படிப்பை தொடர முடியாதவராகவும் காணப்படுகின்றனர். இவை அனைத்தையும் தாண்டிச் செல்லும் மாணவனுக்கு பாடத்தேர்வும் பாடசாலைத் தேர்வும் அற்ற ஓர் நிர்ப்பந்திக்கப்பட்ட கற்றல் சூழலுக்கு தள்ளப்படுகின்றான். பெற்றோரின் சமூகப் பொருளாதாரக் காரணிகள் பிள்ளைகளின் கல்வியில் செல்வாக்குச் செலுத்துகின்றன. தற்காலிகத் தொழில்கள், தொழிலின்மை, குறை வருமானம், மாணவர்களின் குடும்பச் சூழ்நிலைகள் என்பன கல்வியில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன (Rofikul and Nisakhan,2017).

மேலும் மாணவர்களின் துறைத்தெரிவில் பாடசாலை வளங்கள் மற்றும் சமூகம்சார் வளங்களின் கிடைப்பனவுத் தன்மையும் முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றது.

குறிப்பாக துறைசார் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இன்மை, ஒரு ஆசிரியர் இரண்டிற்கு மேற்பட்ட பாடங்களினைக் கற்பிக்கும் சூழ்நிலை காணப்படுவதால் மாணவர்கள் கற்றல்சார்ந்த பல்வேறு சிரமங்களினை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக பாடம் தொடர்பான உரிய விளக்கமின்மை, பரீட்சைகளில் குறைவான புள்ளிகளைப் பெறுகின்ற நிலை காணப்படுகின்றது. அத்துடன் வகுப்பறைச் சூழல் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்கு பொருத்தமானதாக இல்லை. மேலும் சமூகம்சார் வளங்களினைப் பொறுத்த வரையில் போக்குவரத்து மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களின் குறைவான கிடைப்பனவு தன்மையே அதிகளவில் தாக்கம் செலுத்தியுள்ளன. கலாமணி(2015) Rofikul and Nisakhan,2017). பாடசாலைகளில் சில பாடங்களினைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இன்மை, கலைத் துறையில் பாடத் தரிவுகள் பல காணப்படுவதால் எல்லாப் பாடத் தெரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் நேரசூசி தயாரிப்பது கடினமானதாகும். மேலும் மாணவனின் வசிப்பிடம், கல்வி கற்கும் பாடசாலை, வகுப்பறைச் சூழல் மற்றும் பாடசாலையின் பொருளாதார நிலைமைகளும் மாணவர்களின் துறைசார் தெரிவில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

## CONCLUSION

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பிரிவில் துறைத்தெரிவு என்பது மிகவும் முக்கியமான இடத்தினை வகிக்கின்றது. துறைத்தெரிவானது மாணவர்களுடைய எதிர்காலத்தினை சரியான இலக்கினை நோக்கி சென்றடைவதற்கும் வழிகாட்டுவதாக காணப்படுகிறது. எனினும் துறைத்தெரிவினை தெரிவு செய்வதில் குடும்ப, பாடசாலை மற்றும் சமூகக் காரணிகள் முக்கியமான செல்வாக்கினை செலுத்துகின்றது. இப் பிரச்சினையை சீர்செய்வதற்கு கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு தேவையான வளங்களை வழங்குவதுடன், கல்விச் செயற்திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் மாணவர்களின் கல்வியினை உயர்ந்த முறையில் கட்டியெழுப்பிக் கொள்ள முடியும்.

## REFERENCES

Ahmad, Rehman.S.U, Ali.S, Ali.F, Badshah.R (2013). *Problems of government secondary school system in pakistan: critical Analysis of Literature and finding away forward,* International journal of academic research in business and social science vol:03, No 02. Retrieved 2016

Richard James, Johanna Wyn, Gabrielle Baldwin, Gary Hepworth, Craig McInnis and Andrew Stephanou(1999). *Rural and Isolated School Students and their Higher Education Choices: A re- examination of student location, socioeconomic background, and educational advantage and disadvantage*. Centre for the Study of Higher Education and Youth Research Centre The University of Melbourne. Retrieved 2016

Rofikul Islam.MD and zebun Nisa Khan(2017).*Education Quest: An international Journal of Education and Applied Social Science*. Vol:08, No:03,pp 1 – 7. Retrieved 2016

Okumu, Joshua O(2013). *Factors influencing the choice of science subjects in Kenya's secondary schools: a case study of Langata High School in Nairobi County*. University of Nairobi School of Education.

கலாமணி(2015).*க.பொ.த உயர்தர வகுப்பு பாடத்தெரிவில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்.*கல்வியிலாளன் இதழ் 5

வடமாகாண கல்வித் திணைக்களகம், (2014) *வடக்கின் கல்விமுறைமை மீளாய்வு.*